புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

=================================================================================

# பா விஜயின் திரையிசைப் பாடல்களில் அக மாந்தர்கள் உறவுநிலை

டாக்டர் ப.செந்தில்நாதன்,
உதவிப்பேராசிரியர்- தமிழாய்வுத்துறை,
தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி(தன்னாட்சி)
பெரம்பலூர்-621 220.

=================================================================================

ஆய்வுச்சுருக்கம்:

மனிதன் நாகரிகத்தையும் பண்பாட்டையும் கட்டமைத்தது முதல் சமூகமாய் கூடி வாழத் தலைப்பட்டதுவரை உறவுகளையும் பேணி வளர்க்க துவங்கினார் தந்தை தாய் உறவு மனைவி மக்கள் சகோதர உறவுகள் தாண்டி நட்பினை ஆரம்பித்தான் அவர்களுடனான தொடர்பை தனது படைப்புகளிலும் பதிவிட்டான். சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியங்கள் வரை உறவுகளின் உன்னதத்தைப் பேசி வருகின்றன தொல்காப்பியம் கூறும் அகம் அரபு கோட்பாட்டு வரையறைகளுக்கு உட்பட்ட உறவு நிலைகள் குறித்து இலக்கியங்கள் கூறுகின்றன. மனிதர்கள் வாழும் நிலம் கருப்பொருள் சார்ந்து ஒழுக்க நிலைகளும் மாறுபடுகின்றன அருகே ஒரு பண்பாட்டுக் கூறுகள் இலக்கியங்களில் பிரதிபலிக்கின்றன. தமிழ் கூறும் நல்லுலகம் ஐவகை நிலங்கள் ஆனது அவற்றிற்குரிய முதல், கரு, உரிப்பொருள்கள் பல்வேறு தன்மையுடையன அவற்றின் அடிப்படையில் தான் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பண்பாடுகள் கடைப்பிடிக்கப்படுகின்றன உறவுகளும் பண்பாட்டில் அடக்கம் அவ்வகையில் இக்கால இலக்கியங்களில் குறிப்பாக திரையிசைப் பாடல்களில் உறவு நிலைகள்ப் பற்றி பெற்றுள்ளமை குறித்து ஆய்வு நிகழ்த்தப் பெறுகிறது

ஆய்வு அணுகுமுறை:

பா விஜய் பாடல்களில் அக மாந்தர் உறவு நிலை எனும் இவ்வாய்வு பாப் இசை பாடல்களில் காணலாகும் தலைவன் தலைவி குடும்பம் சகோதர உறவு நிலைகளை கண்டறிந்து அகமரபு கோட்பாடுகளுடன் ஒப்பிட்டு விளக்க முற்படுவது இவ்வாய்வில் ஒப்பீட்டு ஆய்வு அணுகுமுறையும் அணுகுமுறையும் பின்பற்றப்பட்டுள்ளது.

ஆய்வு பயன் மற்றும் உரையாடல்:

மனித உறவுகள் மறைந்து வரும் இக்கால சூழலில் உறவுகளை மீட்டெடுக்கும் விதமாகவும் உறவுகளைப் போற்றிப் பாதுகாக்க வேண்டிய தேவையை இன்றைய தலைமுறையினருக்கு உணர்த்த வேண்டியுள்ளது. ஆகவே நவீன இலக்கிய வகையைச் சேர்ந்த இளைஞர்களுக்கு நன்கு பரிச்சயமான திரையிசைப் பாடல்களில் உறவுகள் பேணப்பட்டு வரும் சூழலை எடுத்துரைத்து அவர்களை நல்வழிப்படுத்தும் நோக்கில் ஆய்வு பயனாக கொள்ளலாம். குடும்ப அமைப்பு சிதைந்து போனால் மனித வாழ்விற்கு பொருளில்லை கூடி வாழ்ந்தால் கோடி இன்பம் எனும் முதுமொழி சொல்லும் உண்மை நிலையை உணரவும் மனித சமுதாயம் அன்பால் தழைக்கவும் அடிப்படையாக அமைவது உறவுகளற்ற ஒரு மனிதன் எத்தகைய மன பாரத்தை மன அழுத்தத்தை அனுபவிக்க நேரிடும் என்பதை எல்லாம் தனியாய் இருந்து துயர் ஒருவருக்கே உணரமுடியும் இவற்றை குறித்தெல்லாம் பேசுவதாக ஆய்வு அமைகிறது.

*முன்னுரை:*

*மனிதன் ஒரு சமூக விலங்கு அவனால் தனித்து இயங்க இயலாது கூட்டு வாழ்க்கையின் நீட்சியாக உறவுகளை கொண்டான். கிடைத்த உறவுகளைப் போற்றினான். உறவுகள் என்றும் உறவுகள் என்று பகுத்து வாழ்ந்தான் உறவுகளின் தேவையே இலக்கியங்களில் பதிவு செய்தான்.*

*தமிழினம்,தமிழ்மொழி [தமிழ் இலக்கியங்கள் இதனை குறிப்பிடத் தவறவில்லை உறவுகளுக்கு முக்கியத்துவம் தருவனவாக விளங்கின. உறவுகளாக தலைவன் தலைவி உறவும் குடும்பம் சகோதர தாய் மகன் மகள் உறவுகளும் மற்றும் நட்பைப் பற்றியும் சிலாகிக்கின்றனர் நட்புறவான உறவாகவும், உறவாகவும் பார்க்கப்பட்டது.*

*தொல்காப்பியம் முதல் நவீன இலக்கியங்கள் வரை உறவுகளை உயர்த்தாத இலக்கியங்கள் இல்லை. தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் தலைவன் தலைவி இருவருக்குமான உறவையும் செவிலி. நற்றாய் தோழி இவர்களுடனான உறவையும் மிகுதியாக பேசுகின்றன. நட்பை குறித்து புற இலக்கியங்கள் மிகுதியாக எடுத்துரைக்கின்றன.*

*அவ்வகையில் இருபதாம் நூற்றாண்டு இலக்கியங்களாக அறியப்படும் கவிதை, சிறுகதை, நாடகம், நாவல் போன்றவற்றிலும் உறவுநிலைகள் குறித்த செய்திகள் காணப்படுகின்றன திரையிசைப் பாடல்களையும் இக்கால நவீன இலக்கிய வடிவத்தில் சேர்த்துக் கொள்வது நடைமுறை வழக்கமாகி விட்டதால் திரையிசைப் பாடல்களில் குறிப்பாக பா விஜய் அவர்களுடைய திரையிசைப் பாடல்களில் காணலாகும் உறவு நிலை பற்றிப் விளக்க முற்படுவது இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது..*

*தொல்காப்பியம்- அகப்பொருள் மரபு:*

*தொல்காப்பியம் சங்க தமிழர்களின் அக மரபினை போற்றுகின்றது, ஐந்து என்கிறது. நடுவன் அகத்திணையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், எனும் நான்கு திணைகளை குறித்து அதுவே ஒழுக்கம் என்பதற்கான விளக்கத்தையும் தருகிறது.*

*ஐந்திணைகளுக்கும் முதல், கரு, உரிப்பொருட்களையும் வரையறை செய்கிறது.*

*"முதல் எனப்படுவது ஆயிரு வகைத்தே"*

*(தொல்காப்பியம்-இளம்பூரனார் – 2006)*

*"முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே*
*நுவலும் காலை முறை சிறந் தனவே*
*பாடலுள் பயின்றவை நாடும் காலை"*

*(தொல்காப்பியம்-இளம்பூரனார் – 2006)*

*"முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின்*
*இயல்பென மொழிப இயல்பு உணர்ந்தோரே"*

*(தொல்காப்பியம்-இளம்பூரனார் – 2006)*

*என்று முதற்பொருள் மரபு கூறும் தொல்காப்பியர்,*

*"தெய்வம் உணாவே மா மரம் புள் பறை*
*செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ*
*அவ்வகை பிறவும் கருவென மொழிப"*

*(தொல்காப்பியம்-இளம்பூரனார் – 2006)*

*எனக் கருப்பொருட்களை வகைப்படுத்துகிறார்.*

*"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல்*
*அவற்றின் நிமித்தம் என்றிவை தேரும் காலை*
*திணைக்கு உரிய பொருளே"*

*(தொல்காப்பியம்-இளம்பூரனார்– 2006)*

*என்று உரிப்பொருளைப் பட்டியலிடுகிறார்.*

*இங்ஙனம் மனித வாழ்வானது, இம் முப்பொருட்களுக்குள் தான் இயங்கியது என்பதை தெளிவுறுத்துகிறார். இவற்றை அடிப்படையாக வைத்து இதன் மேல்தான் சங்க கால மக்கள் வாழ்க்கைப் பாதையை நடத்தினர். என்பதற்குச் சங்க இலக்கியங்கள் சான்றாதாரங்களாக விளங்குகின்றன.*

*கருப்பொருளில் மக்களே குறிப்பிடும்போது அவ்வந்நிலத்திற்குரிய தொழிலைச் செய்பவர்கள் அவ்வவ்நிலத்திற்குள் பாகுபாடு பாராமல் அனைவரையும் சமமாக நடத்த*

வேண்டும் என்பதையும் தெளிவுறுத்துகிறார். முப்பொருள்களுக்கான வரையறையைக் கூறும் தொல்காப்பியர்

"முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை"

(தொல்காப்பியம்-இளம்பூரனார் – 2006)

எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்
பொற்புடை நெறிமை இன்மை யான"

(தொல்காப்பியம்-இளம்பூரனார் – 2006)

என்பவற்றில் பெண்களுக்குரிய புதிய மரபுகளைச் செய்திருக்கிறார்.

நற்றாய்-செவிலி, நற்றாய்-தோழி, செவிலி-தோழி உறவு நிலைகளையும் பேசத் தவறவில்லை. குறிப்பாக அக உறவுகளைப் பற்றி விரிவாகக் காட்டுகிறார். அகத்திணையியல் , புறத்திணையியல் , களவியல் ,கற்பியல் ,மெய்ப்பாட்டியல், வரைவியல், மரபியல் போன்ற இயல்களிலும் உறவு மேம்பாடு குறித்து பேசப்பட்டுள்ளன தொல்காப்பிய அக மரபுக் கோட்பாட்டின் அடிப்படையில் "பா.விஜய் பாடல்களில் அகமாந்தர் உறவு நிலை" எனும் தலைப்பில் இவ்வாய்வுப் பொருண்மை அமைகிறது.

தலைவன்- தலைவி உறவு நிலை:

தமிழர்கள் அக வாழ்வினைக் களவென்றும், கற்பென்றும் இரு வகையாகப் பிரித்தனர் களவில் தலைவன் தலைவியரின் உறவுநிலை கற்பு வாழ்வை நோக்கியதான செயல்பாடுகளைக் கொண்டதாக இருக்கும் . தலைவன் தலைவியின் உள்ளக் குறிப்பை உணர்தல், அவளது உறுப்புநலன் பாராட்டுதல், அவளுடனான தொடர்பினை உயர்வாகக் கருதுதல் போன்ற சிந்தனைகளை உடையவனாக இருப்பான். தலைவியும் அவ்வாறே அவனுடனான தொடர்பை மிக உன்னதமானதாகக் கருதுவாள். அவன் தவறிழைக்கக் கூடியவனாக இருந்தாலும் அதை மன்னிக்கும் மனம் உடையவளாகக் காணப்படுவாள்.

"நிலத்தினும் பெரிதே! வானினும் உயர்ந்தன்று !
நீரினும் ஆரள வின்றே !சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேனி மைக்கும் நாடனொடு நட்பே"

(குறுந்தொகை விளக்குரை, புலியூர்கேசிகன், 2006)

எனும் சங்கப்பாடல் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது. இங்ஙனம் தலைவனோடு கொண்ட தொடர்பை நட்பென்றே கொள்கிறாள். தலைவனுக்கும், தலைவிக்குமான உறவு ஏற்படுவதற்கு முதலில் இருவரும் ஒத்த தன்மையுடையவர்களாக இருக்க வேண்டும் என்று தொல்காப்பியம்,

"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோ
டுருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வோடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"

(தொல்காப்பியம்-இளம்பூரனார் – 2006)

என்ற நூற்பாவில் எடுத்துரைக்கிறது.

உறுப்பு நலன் பாராட்டல்:

தலைவன், தலைவி உறவில் உறுப்பு நலன் பாராட்டல் என்பது ஒரு கூறு. தலைவன் தலைவியின் நலம் பாராட்டல் இயல்பு. அகமாந்தர்க்குரிய மரபாக இலக்கணம் கூறுகிறது. இதனைக் குறித்து வள்ளுவரும் 'நலம் புனைந்துரைத்தல் 'எனும் ஒரு அதிகாரமும் வகுத்துள்ளார். அதே போல் பா.விஜய்யும் தனது பாடல்களில் இம்மரபினைக் கையாண்டிருக்கிறார். தலைவன் தலைவியின் உருவத்தை வர்ணனை செய்வதாக அமைகிறது இப்பாடல் .

அவளின் தேகம் எங்கிலும்
மஞ்சள் வண்ணம் அள்ளுதே..!
ஆசை பொங்கும் கண்களில்
நீலவண்ணம் துள்ளுதே ...!
இனியவள் கூந்தலில் கரு வண்ணம்
பாதத்தின் நடைகளில் பால்வண்ணம்

*பெண்ணவள் நகங்களில் செவ்வண்ணம்*
*தங்க கட்டிக்கொண்டுதான்*
*கேள்விக்குறிகள் செய்துதான்*
*ஒட்டி வைத்த பாகமாய்*
*அவளின் செவிகள் தோன்றுமோ?*
*பழமுதிர்சோலை கனிசேர்ந்து*
*அவளின் இதழாய் இருந்திடுமோ?*
*திருக்குறள் போலே சிக்கனமாய்*
*அவளின் இடையும் இருந்திடுமோ?*

*(பா.விஜய் பாடல்கள் பாகம் 2,-2005)*

*இடை எத்தனை மென்மையானது, நுண்மையானது என்பதை வள்ளுவமானது*

*"அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு*
*நல்ல படாஅ பறை''     (திருக்குறள் தெளிவுரை மு வரதராசனார்,2016)*

*என்று கூறுகிறது .*
*ஆசிரியரோ அந்த குறளையே உவமையாகக் கூறியிருப்பது ரசனைக்குரியது.*

*நிறை அழிதல்:*

*தலைவி தான் தலைவன் மேல் கொண்ட காதலை வெளிப்படுத்துகிறாள் .அவனது பெருமைகளைப் பட்டியலிடுகிறாள். கட்டுக்கடங்காத காளையாக இருப்பவனைத் தான் எங்ஙனம் அன்புக் கயிற்றினால் கட்டி இருக்கிறாள் என்பதைக் கூறுகிறாள். தனது நாணத்தை விடுத்துத் தலைவனுடன் தனது உறவை வெளிப்படுத்தும் விதமாகக் கீழ்க்காணும் பாடலை பா.விஜய் எழுதியுள்ளார்.*

*"ஒரு வார்த்தை கேட்க*
*ஒரு வருஷம் காத்திருந்தேன்*
*இந்தப் பார்வை பார்க்க*
*பகல் இரவா பூத்திருந்தேன்*
*சூரியன சூரியனை சுருக்குப்பையில்*
*நான் அள்ளி வர அள்ளிவர ஆசைப்பட்டேன் .*
*சிங்கத்தையும் சிங்கத்தையும் சில நாளா*
*என் சின்ன சின்ன கம்மலுக்குள் பூட்டிக்கிட்டேன்"*

*(பா.விஜய் பாடல்கள் பாகம் 2,-2005)*

*என்ற வரிகள் தலைவி தன் நாணம் விட்டு தலைவன் மேல் கொண்ட காதலை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.*

*காமக் கணிச்சி உடைக்கும் நிறை என்னும்*
*நாணுத்தாழ் வீழ்த்த கதவு*

*(திருக்குறள் தெளிவுரை மு வரதராசனார்,2016)*

*என்கிறார் வள்ளுவரும் நிறையழிதல் அதிகாரத்தில்!*

*தலைவனுடனான உறவினால் தலைவி உணர்வின் உச்சம் தொடுகிறாள். இது அன்பின் மிகுதியைக் காட்டுகிறது.*

*"தண்ணிக்குள்ள தான் நட்ட*
*தாமரை கொடி தெப்பக்குளத்தையும் குடிச்சிருச்சு*

*(பா.விஜய் பாடல்கள் பாகம் 2,-2005)*

*என்ற வரிகளில் தலைவியின் அது அன்பின் மிகுதி வெளிப்படுகிறது. இருவருக்குமான உறவின் ஆழத்தை இந்த வரிகளில் கவிஞர் உணர்த்தி விடுகிறார்.*

*இருத்தலும் இருத்தல் நிமித்தமும்:*

*களவு வாழ்விலும் சரி கற்பு வாழ்விலும் சரி தலைவி தலைவனுக்காகக் காத்திருப்பது மரபு. பொருள் தேடச் சென்றிருந்தாலும், போர்க்களத்திற்குச் சென்றிருந்தாலும், கல்வி கற்கச் சென்றிருந்தாலும் குறித்த நேரத்தில் வருவேன் என சொல்லிச் சென்றவன் வருகிறானாவென ஒவ்வொரு நொடியையும் முள் மேல் நிற்பது போல் கடந்து கொண்டிருப்பாள் தலைவி.*

*வாயிலிலேயே தனது விழிகளை நிறுத்தி வைப்பாள். அவன் வரும் நாட்களை எண்ணி எண்ணி விரல் தேய்ந்தும் கண்கள் பூத்தும் காத்திருப்பாள். இதனை,*

*"வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற*
*நாளொற்றித் தேய்ந்த விரல் "(1261)*

*(திருக்குறள் தெளிவுரை மு வரதராசனார்,2016)*

*என்ற குறட்பா காட்சிப்படுத்துகிறது. தலைவன் சுவரில் குறித்துச் சென்ற நாட்களைத் தொட்டுத் தொட்டு எண்ணிய விரல்களும் தேய்ந்தன. அவன் வருகையைப் பார்த்த கண்களும் ஒளி இழந்தன என்கிறாள் தலைவி. இக்காட்சியைக் கவிஞரும் தனது*

*"பார்த்துப் பார்த்துக் கண்கள் பூத்திருப்பேன் நீ வருவாயென*
*................*
*மணி பார்தது*
*தினம் வழிபார்த்து*
*இருவிழிகள் ஏங்கினேன்*

*(பா.விஜய் பாடல்கள் பாகம் 2,-2005)*

*என்ற வரிகளில் குறிப்பிடுகிறார்*

*பணி நிமித்தம் பனிமொழியாளை விட்டுப் பிரிந்த பதியானவன் குறித்துச் சென்ற நாளினை எண்ணி எண்ணிக் காத்திருக்கும் தலைவி அவனை நினைத்து ஏங்குவதாக இப்பாடலைக் கவிஞர் எழுதியுள்ளமை ஒப்பு நோக்கத்தக்கது.காலங்கள் எத்தனை கடந்தாலும், பிறவிகள் எத்தனை தொடர்ந்தாலும் அத்தனையிலும் தன் தலைவனே தனக்கு கணவனாக வரவேண்டும் என ஏங்கும் தலைவியின் நிலைப்பாட்டை,*

*"இம்மை மாறி மறுமை யாயினும்*
*நீயாகியர் என் கணவனை*
*யானா கிய நின் நெஞ்சு நேர்பவளே"*

*(குறுந்தொகை விளக்குரை, புலியூர்கேசிகன், 2006)*

*எனக் குறுந்தொகை கூறுகிறது. கவிஞர் பாடல்களிலும் இக்கருத்தொத்த பாடல்கள் இடம்பெற்றுள்ளன.*

*"அடுத்த வீட்டு கல்யாணத்தின்*
*பத்திரிக்கை பார்க்கும்போது*
*நமது பெயரை மணமக்களாக*
*மாற்றி எழுதி ரசித்து பார்த்தேன் "*
*................................*
*"வேப்ப மரம் சுத்தி வந்தேன்*
*அரச மரமும் பூத்ததய்யா!" (பா.விஜய் பாடல்கள் பாகம் 2,-2005)*

*இவ்வரிகளில், திருமணம் நடக்க வேண்டி பெண்கள் வேப்ப மரத்தைச் சுற்றுவார்கள். இத்தலைவியும் அதைத்தான் செய்கிறாள். அருகில் இருந்த அரச மரமும் பூத்து விட்டது என்கிறாள். குழந்தை பேற்றிற்காகத்தான் அரச மரத்தை சுற்றுவார்கள் .எனில் தலைவியின் அடுத்த கனவும் நிறைவேறிவிடும் என்ற நம்பிக்கையை இவ்வரிகளில் புலப்படுத்துகிறாள்.*

*தலைவன் வருகைக்காக காத்திருக்கும் தலைவியைத் தனிமை கொல்கிறது. தனிமைக்குத் துணையாக எவருமில்லை. இரவு மட்டுமே துணை. இரவும் நெடிதாக நீள்கிறது. தலைவன் இருக்கும் இடம் தேடி நெஞ்சம் செல்வது போல் கண்களும் சென்றால் அவை கண்ணீர் வெள்ளத்தில் நீந்த வேண்டிய தேவை இல்லை .இவ்வாறு பல பல எண்ணி எண்ணிக் குமைந்தும் குழைந்தும் போகும் தலைவியின் இரங்கற்குரிய நிலையை,*

*"காம கடும் புனல் நீந்தி கரை காணேன் யாமத்தும் யானை உள்ளேன் குரல் 1167 மன்னுயிர் எல்லாம் துயற்றி அளித்த இரா என் அல்லது இல்லை துணை குரல் 1168 போன்ற குறட்பாக்களில் குறிப்பிடுகிறார். இக்கருத்தினையே கவிஞரும் தனது பாடலில் வேறு வடிவில் எடுத்தாண்டு இருப்பதை அறிய முடிகிறது.*

*யாருமில்லா தனியறையில்*
*நீ இருந்தாயே என்னுயிரில்*
*ஞாபகம் வந்ததே செருக்கும் வந்ததே*

பேச வந்ததை எல்லாம் பேசவில்லை
ஒரு மௌனம் தான்"
"சாலையின் ஓரம் போகையில்
உன் தோளில் சாய தோன்றியதே
அங்கும் நீ இல்லையே ஆனால் என்ன
எந்தன் தோளில் நானே சாய்ந்தேன்
இது காதல் தான்" (பா.விஜய் பாடல்கள் பாகம் 2,-2005)

சாய்ந்து கொள்ளவும் தோள் இன்றி தவிக்கும் நிலையில் தன் தோளின் மீது தானே சாய்ந்து கொள்ளும் துயரத்தைப் பதிவிடுகிறாள் தலைவி

"நள்ளென்றன்றே யாமம் சொல்லவிந்
தினிதடங்கினரே மாக்கள் முனிவின்று
நனந்தலை உலகமும் துஞ்சும்
ஓர் யான் மன்ற துஞ்சா தேனே" (குறுந்தொகை விளக்குரை, புலியூர்கேசிகன், 2006)

என்று சங்கத் தலைவியும் இரங்கிப் புலம்புவதும் ஈண்டுஒப்பு நோக்கற் குரியது.

குடும்ப உறவு:

மானுட வாழ்வில் குடும்பம் என்ற அமைப்பு தனித்துவமானது. தனித்திருந்த மனிதன் தேவையின் பொருட்டு கூடி வாழ ஆரம்பித்தான். குழுவாக இருந்தவன் குடும்பம் என்ற அமைப்பிற்குள் தன்னை பொருத்திக் கொண்டான். அன்பு, பாசம், நேசம் முதலியவற்றால் கட்டுண்டு வாழ்ந்தான்.

"குடும்பம் என்பது ஒரு சிறிய குழுவாகவும் இருக்கலாம் .பலர் அடங்கிய ஒரு பெருங்குழுவாகவும் இருக்கலாம்.இதில் குறைந்த அளவு ஓர் ஆணும் ஒரு பெண்ணும் இடம்பெற வேண்டும். இவ்விருவரும் அவர்களுடைய சமுதாயம் ஏற்றுக் கொண்டுள்ள திருமணம் முறைப்படி மணம் செய்து கொண்டவர்களாக இருக்க வேண்டும்.அவ்வாறு ஓர் ஆணும் ,பெண்ணும் கணவன் - மனைவி என்ற உறவை ஏற்படுத்திக் கொள்ளும் பொழுதுதான் அவர்கள் ஒரு குடும்பமாக அமைகிறார்கள். அவர்கள் ஒரே கூரையின்கீழ் உண்டு வாழ்ந்தாலும் காலத்தின் கட்டாயத்தால் தனித்தனியாக உண்டு வாழ்ந்தாலும் கணவன் மனைவி என்னும் பிணைப்பைக் கொண்டுள்ள வரை அவர்கள்குடும்பம் என்ற அமைப்பை கொண்டவர்களேயாவர்" (பண்பாட்டு மானிடவியல் பக்தவத்சல பாரதி, 2014)

என்று குடும்பம் என்ற சொல்லிற்கு பக்தவச்சல பாரதி விளக்கம் தருகிறார்.

ஆகவே கணவன் மனைவி சேரும் போதுதான் அது குடும்பம் என்ற நிலையை அடைகிறது. இது நான்கு நிலைகளில் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

"1.கணவன் -மனைவி பிணைப்பு
2.பெற்றோர் -மக்கள் பிணைப்பு
3.ஒரே பெற்றோருக்குப் பிறந்த மக்களிடையே பிணைப்பு.
4.ஒரு குடும்பத்தாருக்கும் மற்றவர்களுக்கும் இடையே நிலவும் பிணைப்பு"
(பண்பாட்டு மானிடவியல் பக்தவத்சல பாரதி, 2014).

இந்நான்கு வகையான குடும்ப அமைப்புகளுமே இந்தியாவில் காணப்படுகின்றன. தற்போது கணவன்- மனைவி பிணைப்பிலான குடும்ப அமைப்பு முறையே பரவலாக உள்ளது .ஏனைய மூன்று அமைப்புகளும் மிக அரிதாகவே உள்ளன. இருப்பினும் இத்தகைய அமைப்பு சிதைந்து விடாமல் காக்க வேண்டிய சமூகக் கடமை ஒவ்வொருவருக்கும் உண்டு .அறிவுரைக்கும் பொறுப்பு மூத்தோர்க்கும் கேட்டுக்கொள்ள வேண்டிய கடமை இளைய தலைமுறைக்கும் உண்டென்பதால் படைப்பாளர்கள் தங்கள் படைப்புகளின் வாயிலாக அதனைப் பதிவு செய்தே வருகின்றனர்.

தொல்காப்பியம் தலைவன் தலைவி உறவு நிலையை பெரிதும் பேசும் அதே வேளையில் செவிலி, நற்றாய் ,பாங்கன் , தோழிகளுடனான உறவு நிலையையும் பேசத் தவறவில்லை. ஆகவே ,குடும்பம் என்ற முறையானது காலம் காலமாகப் பேணப்படும் ஒரு விடயமாகவே பார்க்கப்படுகிறது. பா.விஜய் பாடல்களிலும் குடும்ப உறவு குறித்த செய்திகள் காணக்கிடைக்கின்றன. ஒரு குடும்பம் ஒற்றுமையை , பாசப் பிணைப்பைப் பற்றிச் சொல்வதாக எழுதியுள்ளார் கவிஞர் பா விஜய்.

*"எங்களின் வீட்டில் எவரும்*
*தனியாய் டைரி எழுதவில்லையே*
*தனியாய் எதையும் மறைக்கும்*
*விஷயம் எங்கள் மத்தியில் இல்லையே .*
*முதல் நாள் கனவை*
*மறுநாள் எழுந்து நாங்கள் பேசிக் கொள்வோம்*
*ஒருவர் விழியில் ஒருவர் வாழ்ந்து*
*உலகம் பார்த்துக்கொள்கிறோம்*

*(பா.விஜய் பாடல்கள் பாகம் 2,-2005) என்கிறார்.*

*ஆனந்தம் விளையாடும் வீடாகத் தங்கள் வீட்டையும், 'கூடி வாழும் இன்பம் கோடிக்கு மேலே' என்பதைக் கூறும் விதமாக,*

*நாள்தோறும் ஒன்றாய் உண்போம்*
*நிலாச்சோறு தான் நடமாடும் பூக்கள் சேர்ந்து*
*வாழும் வீடுதான்.*
*மழைக்காலம் என்றால் குடை நான்கு வேண்டாம்*
*நமக்கு ஒற்றைக்குடை போதும்"*
*ஆயிரம் ஜென்மங்கள் அவசியம் இல்லை*
*இப்படி ஒரு சொந்தம் இருக்கின்ற நாள் போதும்*

*(பா.விஜய் பாடல்கள் பாகம் 2,-2005)*

*"தனித்தனி விழிகளில் ஒருவித கனவுகள்*
*ஒருவரின் இதயத்தில் ஒருவரின் துடிப்பிருக்கும்"*

*(பா.விஜய் பாடல்கள் பாகம் 2,-2005)*

*என்ற பாடல் வரிகளில் எடுத்துரைக்கிறார் மனிதன் ஒரு சமூக விலங்காக இருப்பதால் சமுதாயத்திற்கு கட்டுப்பட்டவனாக சமூக நியதிகளைக் கடைபிடிப்பவனாக இருத்தல் அவசியமாகிறது.*

*நட்புறவு:*

*ஆயிரம் உறவுகள் இருந்தாலும் எல்லாவற்றையும் தாண்டிய உறவாக நட்புறவு பார்க்கப்படுகிறது . அதனால் தான் வள்ளுவரும் நட்பியல் எனும் ஓர் இயலையே உருவாக்கி அதில் நட்பு எனும் அதிகாரம் தொடங்கி மருந்து என்ற அதிகாரம் வரை 16 அதிகாரங்களை எழுதியுள்ளார். ஒவ்வொரு அதிகாரத்திலும் நட்பைக் குறித்துப் பல்வேறு பரிமாணங்களைக் காட்சிப்படுத்துகிறார். ஒரு மனிதன் தாய் ,தந்தை, உறவினர் இல்லாமல் கூட வாழ முடியும் நட்பென்னும் துணையின்றி வாழ இயலாது என்பதையே இது காட்டுகிறது . தோழி ஒருத்தி தன் தோழிக்காகப் பாடுகிறாள் . தேவதை வமசமாகவும், தேன்நிலா அம்சமாகவும் இருப்பதாகப் பாடுகிறாள். மேலும்,*

*"பகலினில் முழுவதும் வெயிலிலே*
*உன்னைச் சுட்டு வருத்திய*
*வானம் அது ......*
*இரவில் முழுவதும் அதை எண்ணியே*
*பனித்துளி சிந்தியே அழுகிறது " (பா.விஜய் பாடல்கள் பாகம் 2,-2005)*
*"வாழ்வின் திசை மாறும் பாதைகளும் மாறும்*
*நட்பு அது மாற்றம் இன்றி தொடருமே....*
*சொந்தம் கூட வரும் வந்து வந்து போகும்*
*என்றும் அந்த நட்பு மட்டும் வேண்டுமே*

*(பா.விஜய் பாடல்கள் பாகம் 2,-2005) என்று நட்பிற்குக் குடை பிடிக்கிறார்.*

*எத்தனை சொந்தங்கள் இருந்தாலும் ஒரு நட்பிற்கு ஈடாகாது என்பதை நிலை நாட்டுகிறார்.*

*முடிவுரை:*

*திரை இசைப் பாடல்களும் படைப்பிலக்கியம் என்ற வகையறாவில் சேர்வதால், இவ்வாய்வுக்குக் கவிஞர் பா. விஜய் திரையிசை பாடல்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன*

.அப்பாடல்களில் இடம்பெறும் அக மாந்தர்  உறவுநிலை பற்றி ஆய்வு அமைகிறது . அகமாந்தர் என்போர் தலைவன் தலைவி மட்டுமல்லாது, அவர்களுடன் நேரிடையாகவோ மறைமுகமாகவோ தொடர்பில் இருப்பவர்களும் குடும்பத்திற்குச் சொந்தமானவர்களே என்பதை அடிப்படையாக வைத்து இவ்வாய்வு நிகழ்த்தப்பட்டுள்ளது. தலைவன் தலைவி அகமாந்தர்களாயிரேப்பினும்  உடன் இருப்போரினைப் பற்றியும் பேசுவதால் அவ்விருவர் மட்டுமல்லாது யாவரும் அகமத்தர் என்ற அடிப்படையைக் கொண்டு "பா விஜய் பாடல்களில் அகமாந்தர் உறவு நிலை "எனும் இவ்வாய்வு நிகழ்த்தப்பட்டுள்ளது.

*அடிக்குறிப்புகள்:*

*1. இளம்பூரனார் உரை தொல்காப்பியம் பொருள் அதிகாரம் அகத்தினை ப.16 சாரதா பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு டிசம்பர் 2006,*

*2. இளம்பூரனார் உரை தொல்காப்பியம் பொருள் அதிகாரம் அகத்திணை ப.8 சாரதா பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு டிசம்பர் 2006,*

*3. இளம்பூரனார் உரை தொல்காப்பியம் பொருள் அதிகாரம் அகத்திணை, ப.16 சாரதா பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு டிசம்பர் 2006,*

*4. இளம்பூரனார் உரை தொல்காப்பியம் பொருள் அதிகாரம் அகத்திணை ப.14 சாரதா பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு டிசம்பர் 2006,*

*5. இளம்பூரனார் உரை தொல்காப்பியம் பொருள் அதிகாரம் அகத்திணை ப.34 சாரதா பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு டிசம்பர் 2006,*

*6. இளம்பூரனார் உரை தொல்காப்பியம் பொருள் அதிகாரம் அகத்திணை ப.35 சாரதா பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு டிசம்பர் 2006,*

*7. குறுந்தொகை-விளக்குரை, புலியூர் கேசிகன், சாரதா பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு டிசம்பர் 2006,*

*8. இளம்பூரணார் (உரை), தொல்காப்பியம், பொருள் அதிகாரம், அகத்தினை சாரதா பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு .டிசம்பர் 2006*

*9. ப.விஜய்,பா விஜய்யின் திரைப்பாடப்படல்கள் பாகம் 2 பக்கம் 188 குமரன் பதிப்பகம் சென்னை முதற்பதிப்பு ஏப்ரல் 2005*

*10.மு வரதராசனார் (2. ஆ), திருக்குறள் தெளிவுரை பக்கம் 229, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், லிட், சென்னை, 216 பதிப்பு, 2016.*

*11.ப.விஜய்,பா விஜய்யின் திரைப்பாடப்படல்கள் பாகம் 2 , பக். 182, 183, குமரன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, ஏப்ரல் 2005*

*12.மு வரதராசனார் (2. ஆ) , திருக்குறள் தெளிவுரை .ப. 257 திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், லிட், சென்னை, 216 பதிப்பு, 2016.*

*13. ப.விஜய்,பா விஜய்யின் திரைப்பாடப்படல்கள் பாகம் 2 , பக். 192, குமரன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, ஏப்ரல் 2005*

*14.மு வரதராசனார் (2. ஆ) , திருக்குறள் தெளிவுரை பக்கம்.259 திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், லிட், சென்னை, 216 பதிப்பு, 2016.*

*15. ப.விஜய்,பா விஜய்யின் திரைப்பாடப்படல்கள் பாகம் 2, பக். 203,204, குமரன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, ஏப்ரல் 2005*

*16.குறுந்தொகை விளக்குரை,புலியூர்கேசிகன், சாரதா பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு டிசம்பர் 2006,*

*17. . ப.விஜய்,பா விஜய்யின் திரைப்பாடப்படல்கள் பாகம் 2, ப.194 குமரன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, ஏப்ரல் 2005*

*18.மு. வரதராசனார். (2. ஆ) , திருக்குறள் தெளிவுரை ப.239 திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், லிட், சென்னை, 216 பதிப்பு, 2016.*

*19. மு. வரதராசனார். (2. ஆ) , திருக்குறள் தெளிவுரை ப.239 திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், லிட், சென்னை, 216 பதிப்பு, 2016.*

*20. பா.விஜய், பா விஜய்யின் திரைப்பாடப்படல்கள் பாகம் ப.146. குமரன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, ஏப்ரல் 2005*

*21. பக்தவத்சல பாரதி. பண்பாட்டு மானிடவியல், பக்.351,352, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், விரிவாக்கம் பெற்ற திருத்திய பதிப்பு, பிப்ரவரி 2014*

*22. பக்தவத்சல பாரதி. பண்பாட்டு மானிடவியல், ப. 351 மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், விரிவாக்கம் பெற்ற திருத்திய பதிப்பு, பிப்ரவரி 2014*

********* ********* ********** ********* ********* ********** ********** **********